அறிவிப்பு

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட நீதிமன்ற வளாகம், நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு **30 சட்ட தன்னார்வலர்கள் (Para Legal Volunteers)** தேர்ந்தெடுக்கப்பட கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது. இதற்கு வருகின்ற ஆகஸ்ட் மாதம் 21ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் வேதாரண்யம், கீழ்வேளூர் மற்றும் திருக்குவளை வட்ட சட்டப்பணிகள் குழுவுக்கு குழந்தை தொழிலாளர் முறை மற்றும் கடத்தலுக்கு எதிரான குற்றங்களிலிருந்தும், அடிமைத்தளத்திலிருந்தும் காணாமல் போன குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து கல்வி கற்பிப்பதன் மூலம் குழந்தை நட்பு சமுதாயத்தை உருவாக்க சட்டம் சார்ந்த தன்னார்வல தொண்டர்கள் தேர்தெடுக்கப்பட உள்ளனர். இப்பணி சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை மற்றும் சேவை மட்டுமே. இது நிரந்தர பணிக்கானது அல்ல முற்றிலும் தற்காலிகமானது மற்றும் இதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை. சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டும் அளிக்கப்படும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது. இப்பணிக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி பன்னிரண்டாம் வகுப்பு, வயது வரம்பு 25 முதல் 35 வயதுக்குள்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். பட்டதாரிகளுக்கும், சமூகப்பணி உளவியல் அல்லது அதுசார்ந்த பிற துறைகளில் தகுதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர்கள் விண்ணப்பிக்க முடியாது. சட்ட தன்னார்வலர்கள் ஆரம்பத்தில் ஓராண்டு காலத்துக்கு பட்டியலிடப்படுவர். அவர்களின் செயல்பாட்டின் அடிப்படையில் தலைவரின் பரிந்துரையின் பேரில் காலநீட்டிப்பு செய்யப்படலாம்.

சட்டத் தன்னார்வ தொண்டராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை https://nagapattinam.dcourts.gov.in/ என்ற நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, **பூர்த்தி செய்த உரிய ஆவணங்களுடன் 21.08.2026-ம் தேதி மாலை 5.30 மணிக்குள் பதிவு தபால் மூலமாகவோ (அ) நேரிலோ விண்ணப்பிக்கலாம்.**

நேர்காணல் மூலம் தகுதியான நபர்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர். நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படுபவர்கள், தேர்வு செய்யப்படாதவர்களின் விபரம் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுவர்களின் விவரமும் நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என மாண்புமிகு தலைவர் / மாவட்ட நீதிபதி திரு. T.H. முகமது ஃபரூக், M.A., M.L., தெரிவித்துள்ளார்.

28/7/26

CHAIRMAN / DISTRICT JUDGE
Dist. Legal Services Authority
Nagapattinam - 611 001

28/7/26